கிறிஸ்து அரசர் பெருவிழா.

2017.11.27

முன்னுரை.

என் தந்தையிடமிருந்து ஆசி பெற்றவர்களே, வாருங்கள். உலகம் தோன்றியதுமுதல் உங்களுக் காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஆட்சியை உரிமைப்பேறாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

இறை இயேசுவில் அன்புமிக்க சகோதரரே! சகோதரிகளே! நம்மைத் தேடி வருபவரும், பேணிக் காக்கின்ற வரும்,மீட்டுக்கொள்கின்றவரும், திடப்படுத்துகின்றவரும், நமக்கு நீதிவழங்குகின்றவருமான நம் இறைத் தந்தையின் திருநாமத்தில் நல் வாழ்த்துக்கள் கூறி கிறிஸ்து அரசர் பெருவிழாத் திருப்பலிக் கொண்டாட்டத்தில் இரண்டறக் கலந்து செபிக்க வந்திருக்கும் உங்கள் அனைவரையும் அன்போடு வரவேற்கின் றோம்.
இன்றைய உலகிற்கு: அன்பு, பாசம், பரிவு, அக்கறை, மன்னிப்பு, உண்மை, நீதி, அமைதி உடைய தலைமைத்துவம், நம்மைத் தேடிவரும் தலைமைத்துவம் தேவை. இவை அனைத்தும் நம் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவிடம் மாத்திரமே உண்டு என்னும் அதி உன்னதமான உண்மையை இன்றைய இறைவார்த்தைகள் நமக்குத் தெளிவுபடுத்துகின்றன. அவை நமது நம்பிக்கையை இன்னும் அதிகமாக்குகின்றன.

எனவே: நம் வாழ்நாள் எல்லாம் நம்மைப் புடைசூழ்ந்துவரும் இறைவனின் அருள் நலத்திலும் பேரன்பிலும், நம்பிக்கை கொண்டவர்களாக, மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததை எல்லாம் எனக்கே செய்தீர் கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: என்னும் இயேசுவின் பொன் வாக்கை வாழ்வாக்க அருள் வரம் கேட்டு இத் திருப்பலியில் பங்கேற் றுச் செபிப்போம்.

முதல் வாசகம்.

என் மந்தையே, நான் ஆட்டுக்கும் ஆட்டுக்கும் இடையேயும் ஆட்டுக் கிடாய்களுக்கும், வெள்ளாட்டுக் கிடாய்களுக்கும் இடையேயும் நீதி வழங்குவேன்.

இறைவாக்கினர் எசேக்கியேல் நூலிலிருந்து வாசகம். 31:11-12, 15-17
தலைவராகிய ஆண்டவர் இவ்வாறு கூறுகிறார்: நானே என் மந்தையைத் தேடிச் சென்று பேணிக் காப்பேன். ஓர் ஆயன் தன் மந்தையினின்று சிதறுண்ட ஆடுகளைத் தேடித் செல்வதுபோல, நானும் என் மந்தையைத் தேடிப் போவேன். மப்பும் மந்தாரமுமான நாளில் அவற்றை எல்லா இடங்களினின் றும் மீட்டு வருவேன்.

நானே என் மந்தையை மேய்த்து, இளைப்பாறச் செய்வேன், என்கிறார் தலைவராகிய ஆண்டவர். காணாமல் போனதைத் தேடுவேன். அலைந்து திரிவதைத் திரும்பக்கொண்டு வருவேன். காயப்பட்டதற்குக் கட்டுப்போடுவேன். நலிந்தவற்றைத் திடப்படுத்துவேன். ஆனால், கொழுத்ததையும் வலிமையுள்ளதையும் அழிப்பேன். இவ்வாறு நீதியுடன் அவ ற்றை மேய்ப்பேன்.

எனவே தலைவராகிய ஆண்டவர் இவ்வாறு கூறுகிறார்: உன்னைப் பொறுத்தவரை, என் மந்தையே, நான் ஆட்டுக்கும் ஆட்டுக்கும் இடையேயும் ஆட்டுக் கிடாய்களுக்கும், வெள்ளாட்டுக் கிடாய்களுக்கும் இடையேயும் நீதி வழங்குவேன்.

இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.

பதிலுரைப்பாடல். திபா. 23: 1- 3, 5-6

பல்லவி: ஆண்டவரே என் ஆயர். எனக்கேதும் குறையில்லை.

ஆண்டவரே என் ஆயர். எனக்கேதும் குறையில்லை. பசும்புல் வெளிமீது எனை அவர் இளைப்பாறச் செய்வார். அமைதியான நீர்நிலைகளுக்கு எனை அழைத்துச் செல்வார். **பல்லவி**

அவர் எனக்குப் புத்துயிர் அளிப்பார். தம் பெயர்க்கேற்ப எனை நீதிவழி நடத்திடுவார். **பல்லவி**

என்னுடைய எதிரிகளின் கண் முன்னே எனக்கொரு விருந்தினை ஏற்பாடு செய்கின்றீர். என் தலையில் நறுமணத் தைலம் பூசுகின்றீர். எனது பாத்திரம் நிரம்பி வழிகின்றது. **பல்லவி**

உண்மையாகவே, என் வாழ்நாள் எல்லாம் உம் அருள் நலமும் பேரன்பும் எனைப் புடைசூழ்ந்துவரும். நானும் ஆண்டவரின் இல்லத்தில் நெடுநாள் வாழ்ந்திருப்பேன். **பல்லவி**

இரண்டாம் வாசகம்.

கிறிஸ்துவின் வருகையின்போது கடவுளே அனைத்திலும் அனைத்துமாயிருப்பார்.

திருத்தூதர் பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம் 15:20-26,28
சகோதரர் சகோதரிகளே,

ஆனால் இப்போதோ, இறந்த கிறிஸ்து உயிருடன் எழுப்பப்பட்டார். அவரே முதலில் உயிருடன் எழுப்பப்பட்டார். இது அனைவரும் உயிருடன் எழுப்பப்படுவர் என்பதை உறுதிப்படுத்துகிறது. ஒரு மனிதர் வழியாகச் சாவு வந்ததுபோல ஒரு மனிதர் வழியா கவே இறந்தோர் உயிர்த்தெழுகின்றனர். ஆதாமை முன்னிட்டு அனைவரும் சாவுக்குள் ளானது போலக் கிறிஸ்துவை முன்னிட்டு அனைவரும் உயிர் பெறுவர். ஒவ்வொருவரும் அவரவர் முறை வரும்போது உயிர்பெறுவர். கிறிஸ்துவே முதலில் உயிர்பெற்றார். அடு த்து, கிறிஸ்துவின் வருகையின்போது அவரைச் சார்ந்தோர் உயிர் பெறுவர். அதன் பின் னர் முடிவு வரும். அப்போது கிறிஸ்து ஆட்சியாளர், அதிகாரம் செலுத்துவோர், வலிமை யுடையோர் ஆகிய அனைவரையும் அழித்துவிட்டு, தந்தையாகிய கடவுளிடம் ஆட்சியை ஒப்படைப்பார்.

எல்லாப் பகைவரையும் அடிபணிய வைக்கும்வரை அவர் ஆட்சி செய்தாக வேண்டும். சாவே கடைசிப் பகைவன், அதுவும் அழிக்கப்படும். அனைத்துமே மகனுக்கு அடிபணி யும்போது தமக்கு அனைத்தை யும் அடிபணியச் செய்த கடவுளுக்கு மகனும் அடிபணி வார். அப்போது கடவுளே அனைத்திலும் அனைத்துமாயிருப்பார்.

இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.

நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி. மாற்.11:10

அல்லேலூயா, அல்லேலூயா! ஆண்டவர் பெயரால் வருகிறவர் போற்றப்பெறுக! வரவிருக்கும் நம் தந்தை தாவீதின் அரசு போற்றப்பெறுக! அல்லேலூயா.

நற்செய்தி வாசகம்.

மானிட மகன் மாட்சியுடன் வரும்போது தம் மாட்சிமிகு அரியணையில் வீற்றிருப்பார்.

மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 25: 31-46

அக்காலத்தில்

இயேசு தம் சீடர்களை நோக்கிக் கூறியது: 'வானதூதர் அனைவரும் புடை சூழ மானிட மகன் மாட்சியுடன் வரும்போது தம் மாட்சிமிகு அரியணையில் வீற்றிருப்பார். எல்லா மக்களினத்தாரும் அவர் முன்னிலையில் ஒன்று கூட்டப்படுவர். ஓர் ஆயர் செம்மறியாடு களையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரித்துச் செம்மறியாடுகளை வலப்பக்கத் திலும் வெள்ளாடுகளை இடப்பக்கத்திலும் நிறுத்துவதுபோல் அம்மக்களை அவர் வெவ் வேறாகப் பிரித்து நிறுத்துவார்.

பின்பு அரியணையில் வீற்றிருக்கும் அரசர் தம் வலப்பக்கத்தில் உள்ளோரைப் பார்த்து, என் தந்தை யிடமிருந்து ஆசி பெற்றவர்களே, வாருங்கள். உலகம் தோன்றியதுமுதல் உங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஆட்சியை உரிமைப்பேறாகப் பெற்றுக் கொள்ளுங்கள். ஏனெனில் நான் பசியாய் இருந்தேன், நீங்கள் உணவு கொடுத்தீர் கள். தாகமாய் இருந்தேன், என் தாகத்தைத் தணித்தீர் கள். அன்னியனாக இருந் தேன், என்னை ஏற்றுக் கொண்டீர்கள். நான் ஆடையின்றி இருந்தேன், நீங்கள் எனக்கு ஆடை அணிவித்தீர்கள். நோயுற்றிருந்தேன், என்னைக் கவனித்துக் கொண்டீர் கள். சிறையில் இருந்தேன், என்னைத் தேடி வந்தீர்கள் என்பார்.

அதற்கு நேர்மையாளர்கள் ஆண்டவரே, எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராகக் கண்டு உணவளித் தோம், அல்லது தாகமுள்ளவராகக் கண்டு உமது தாகத்தைத் தணித் தோம்? எப்பொழுது உம்மை அன்னியராகக் கண்டு ஏற்றுக் கொண்டோம்? அல்லது ஆடை இல்லாதவராகக் கண்டு ஆடை அணிவித்தோம்? எப்பொழுது நோயுற்றவராக அல்லது சிறையில் இருக்கக் கண்டு உம்மைத் தேடி வந்தோம்? என்று கேட்பார்கள்.

அதற்கு அரசர், மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததை எல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல் லுகிறேன் எனப் பதிலளிப்பார்.

பின்பு இடப்பக்கத்தில் உள்ளோரைப் பார்த்து, 'சபிக்கப்பட்டவர்களே, என்னிடமிருந்து அகன்று போங்கள். அலகைக்கும் அதன் தூதருக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிற என்றும் அணையாத நெருப்புக்குள் செல்லுங்கள். ஏனெனில் நான் பசியாய் இருந்தேன், நீங்கள் எனக்கு உணவு கொடுக்கவில்லை. தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தணிக்கவில்லை. நான் அன்னியனாய் இருந்தேன், நீங்கள் என்னை ஏற்றுக் கொள்ள வில்லை. நோயுற்றிருந்தேன், சிறையிலிருந்தேன், என்னைக் கவனித்துக்கொள்ள வில்லை' என்பார்.

அதற்கு அவர்கள், ஆண்டவரே, எப்பொழுது நீர் பசியாகவோ, தாகமாகவோ, அன்னி யராகவோ, ஆடையின்றியோ, நோயுற்றோ, சிறையிலோ இருக்கக் கண்டு உமக்குத் தொண்டு செய்யாதிருந்தோம்? எனக் கேட்பார்கள்.

அப்பொழுது அவர், மிகச் சிறியோராகிய இவர்களுள் ஒருவருக்கு நீங்கள் எதையெல் லாம் செய்யவில்லையோ அதை எனக்கும் செய்யவில்லை என உறுதியாக உங்களுக் குச் சொல்கிறேன் எனப் பதிலளிப்பார்.

இவர்கள் முடிவில்லாத் தண்டனை அடையவும் நேர்மையாளர்கள் நிலை வாழ்வு பெறவும் செல்வார்கள்'.

இது கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.

மன்றாட்டுக்கள்.

1. இறை ஆட்சியை உரிமைப்பேறாகத் தரும் தந்தையே இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள், அனைவரும், உமது வார்த்தையால் புத்தூக்கம் பெற்று அன்பு, பாசம், பரிவு, அக்கறை, மன்னிப்பு, உண்மை, நீதி, அமைதி ஆகிய நற்பண்புகளை தம் வாழ்வில் வெளிப்படுத்தி ஆசீர்வாதத்தின் ஊற்றுக்களாகத் திகழ்ந்திட, அவர்களுக்கு வேண்டியந நல்லுள்ளத்தை அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. எம்மைத் தேடி வருபவரும் தந்தையே இறைவா! உமது பிள்ளைகளாகிய நாங்கள் அனைவரும், தேவையில் இருப்போரைத் தேடிச்சென்று அவர்களுடைய தேவைகளில் தன்னலமின்றி உதவிடும் அருளை எமக்கு அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. புத்துயிர் அளிக்கும் தந்தையே இறைவா! இறந்து போன திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள், பொதுநிலைப் பணியாளர்கள் அனைவரையும் ஆசீர்வதித்து, நிறைவாழ்வை அவர்களுக்கு உரிமைப் பேறாக வழங்கிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அமைதியான நீர்நிலைகளுக்கு எம்மை அழைத்துச் செல்லும் தந்தையே இறைவா! எமது மறைமாவட்டத்தை உமது திருவுளத்திற்கேற்ப வழநடாத்தும் சிறந்ததொரு மேய்ப்பரை எமக்குத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.